<u>அ.வ.எண். 439/2020</u> <u>நாள்: 07.11.2022</u>

<u>DW.1:பாலசுப்பிரமணியம்</u>

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

வாதி சாரதாமணி என் சகோதரி என்று சொன்னால், சரிதான். 2ம் பிரதிவாதி ராமகிருஷ்ணன் என் உடன் பிறந்த சகோதரர் என்று சொன்னால், சரிதான். என் முதல் விசாரணை ஆணையுறுதிப் பத்திரத்தில் நான் 2ம் பிரதிவாதி ராமகிருஷ்ணனுக்காகவும் சாட்சி சொல்வதாக குறிப்பிட்டுள்ளேன் அதனால் என் முதல் விசாரணை ஆணையுறுதிப் பத்திரத்தில் உள்ள விவரங்கள் 2ம் பிரதிவாதிக்கும் தெரியுமா என்று கேட்டால், நானும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்துதான் எங்கள் வழக்கறிஞரிடம் தகவல் சொன்னோம், அதனால் என் முதல் விசாரணை ஆணையுறுதிப் பத்திரத்தில் உள்ள விவரங்கள் 2ம் பிரதிவாதிக்கும் தெரியும். என் அப்பா ராஜாமணி 01.02.1998ம் தேதி இறந்து போனார். என் அப்பா கூட பிறந்த அவருடைய அண்ணன் மற்றும் என்னுடைய பெரியப்பா நஞ்சுன்டேஷ்வரன் ஆகும். என் அப்பாவுக்கும், என் பெரியப்பா நஞ்சுன்டேஷ்வரனுக்கும் பிதுஆர்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருந்தன என்று சொன்னால், ஆமாம். என் அப்பாவுக்கும், என் பெரியப்பா நஞ்சுன்டேஷ்வரனுக்கும் என் அப்பா இறக்கும் வரை பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக பாக பிரிவினை ஏற்படவில்லை என்று சொன்னால், சரியில்லை, 1984ம் ஆண்டு அரசாங்கமே ஒரு சர்வே செய்தது, அந்த சர்வேயில் மணியக்காரர் ரெக்கார்டிலும், பதிவாளர் அலுவலக பதிவேட்டிலும், வில்லங்க சான்றிதழிலும் என் அப்பா பெயர் வந்துவிட்டது, ஆனால் பாக சாசன பத்திரத்தை மட்டும் பதியவில்லை. நான் தற்போது மேலே கூறிய விவரங்களை எங்கள் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான். என் அப்பா இறந்த பிறகு எனது சகோதரி சாரதாமணி, என் பெயர், என் சகோதரர் 2ம் பிரதிவாதி ராமகிருஷ்ணன் மற்றும் எங்கள் தாயார் தெய்வநாயகம் ஆகியோரின் பெயர் என் அப்பாவின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வருவாய் துறை ஆவணங்களில் பதிவு

செய்யப்பட்டது என்று சொன்னால், சரிதான். வாதி சாரதாமணிக்கு திருமணம் நடந்த பிறகு தான் வாதியும், நானும், 2 ம் பிரதிவாதியும், எங்கள் தாயாரும், என் பெரியப்பா நஞ்சுன்டேஷ்வரனும் Ex.A.1 பாகப்பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால், ஆமாம், வாரிசு சான்றிதழில் என் தங்கை வாதி சாரதாமணி பெயர் வந்துள்ளதால் வெண்டார் சொன்னதால் வாதி பெயரை அந்த பாகப்பத்திரத்தில் சேர்த்தோம். நான் ஒன்பதாவது படித்துள்ளேன். Ex.A.1 பாகப்பத்திர வாசகங்களை எனக்கு வெண்டார் படித்துக்காட்டி, சார்பதிவாளர் அலுவலகத்திலும் அதை படித்துக்காட்டி நான் சரி என்று சொல்லிதான் அதில் என் கையொப்பங்களை போட்டேன் என்று சொன்னால், ஆமாம். 06.02.2014 ம் தேதியிட்ட Ex.A.1 பாகப்பத்திரத்தில் அதில் கண்ட B schedule சொத்துக்கள் எனக்கும், 2 ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும், எங்கள் தாயார் தெய்வநாயகத்திற்கும் பாத்தியப்பட்டது என்று தான் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால், ஆமாம். என் அப்பா உயிரோடு இருந்தபோது அவருக்கு பாத்தியப்பட்ட பங்கைப் பொருத்து எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் தான் இறந்து போனார் என்று சொன்னால், ஆமாம். எங்கள் தாயார் தெய்வநாயகம் 16.08.2020 ம் தேதி இறந்து போனார். எங்கள் தாயார் தெய்வநாயகம் இறப்பதற்கு முன்பு Ex.A.1 பாகப்பத்திரத்தில் கண்டுள்ள B schedule சொத்தில் உள்ள அவருடைய பங்கைப் பொருத்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் தான் இறந்து போனார் என்று சொன்னால், சரிதான். எங்கள் தாயார் தெய்வநாயகம் இறந்த பிறகு வாதிக்கும், எனக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் Ex.A.1 பாகப்பத்திரத்தில் கண்டுள்ள B schedule சொத்தில் எங்களுக்குள்ள பங்கைப் பொருத்து எந்தவித பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்று சொன்னால், சரிதான். எங்கள் தாயார் இறந்த பிறகு என் சகோதரி வாதி சாரதாமணி, எனக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் எவ்வித விடுதலைப் பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால், ஆமாம். HDFC வங்கியில் நானும், வாதியும், 2 ம் பிரதிவாதியும் கடன் வாங்கினோம் என்று சொன்னால், ஆமாம், பூமியை அபிவிருத்தி செய்வதற்காக விவசாயக் கடன் வாங்கினோம், அந்த கடன் கட்டிமுடிக்கப்பட்டது. அந்த கடனை எப்போது கட்டிமுடித்தோம் என்று கேட்டால், தற்போது இருந்து ஒரு மாதத்திற்கு முன்பு கட்டிமுடித்தோம். நான் இவ்வழக்கில் 27.09.2022 ம் தேதி முதல் விசாரணை சாட்சியம் அளிப்பதற்கு முன்பு அக்கடனை கட்டினேனா அல்லது அதற்கு பின்பு அக்கடனை

கட்டினேனா என்று கேட்டால், அந்த காலத்தில் தான் கட்டினேன், ஆனால் தேதி சரியாக தெரியவில்லை. என் முதல் விசாரணை ஆணையுறுதிப் பத்திரத்தில் நான் HDFC பேங்க் கடனை கட்டி வருகிறேன் என்று சொல்லியிருப்பது சரியா, தவறா என்று கேட்டால், அப்போது அந்த கடன் முடியும் தருவாயில் இருந்தது, ஆனால் அக்கடனை கட்டிமுடித்த தேதி எனக்கு சரியாக தெரியவில்லை. வங்கியில் கடன் பெற்ற போது நான் சட்ட கருத்துரை பெற்றேன் என்றால், சரிதான். அந்த சட்டக் கருத்துரையில் தாவா சொத்தில் என் தங்கையான வாதிக்கும் பங்கிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்ததால் தான் பேங்கில் வாதியையும் ஒரு மனுதாரராக போட்டு அக்கடனை வாங்கினோம் என்று சொன்னால், பாகப் பத்திரத்தில் வாதியின் பெயர் வருவதால், அவர் பெயரையும் போட்டு கடன் வாங்கினோம். தாவா சொத்திற்கான அரசாங்க வழிக்காட்டுதல் மதிப்பை இன்று வரை நான் பார்க்கவில்லை என்று சொன்னால், பார்க்கவில்லை, ஆனால் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பே கனவனாயக்கனூர் பஞ்ஜாயத்தில் உள்ள சொத்துக்களுக்கு ஒரு ஏக்கர் ரூபாய் 8,00,000/– என மதிப்பு இருந்தது. வாதி பிராதில் தாவா சொத்திற்கு மதிப்பு போட்டுள்ளார், அவ்வாறு என்ன மதிப்பு போட்டுள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்று கேட்டால், அது எனக்கு தெரியாது. நான் பிராதை படித்துப்பார்த்து வாதி என்ன கேஸ் போட்டுள்ளார் என்பதை தெரிந்து கொண்டேன். வாதி பிராதில் தாவா சொத்திற்கு என்ன மதிப்பு போட்டுள்ளார் என்பதே தெரியாமல் நான் என் எதிர்வழக்குரையிலும், என் முதல் விசாரணையிலும் வாதி தாவா சொத்திற்கு அதிக அல்லது குறைந்த மதிப்பை போட்டுள்ளார் என்று ஆட்சேபணை தெரிவித்து அதனால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்க முடியாது என்று சொன்னால், வாதி முதலில் ரூபாய்.20,00,000/– என்று மதிப்பை போட்டுவிட்டு பிறகு மதிப்பு ரூபாய்.70,00,000/– என்று கூறியுள்ளார், நான் முதலில் பதட்டத்தால் வாதி தாவா சொத்தின் மதிப்பை எவ்வளவு குறிப்பிட்டுள்ளார் என்பது தெரியாது என்று சொல்லிவிட்டேன். தாவா சொத்து எங்களுக்கு பிதுஆர்ஜித வகையில் பாத்தியப்பட்டது என்றும், அதனாலும் 06.02.2014 ம் தேதியிட்ட Ex.A.1 பாகப்பத்திரத்தில் நாங்கள் வாதியின் பங்கை ஒத்துக்கொண்டுள்ளதாலும், தாவா சொத்தில் வாதிக்கு அவர் கேட்டுள்ள பங்கு உள்ளது என்று சொன்னால், சரியில்லை. இன்று வரை வாதி எங்களோடு தாவா சொத்தில்

கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும், அதனால் தாவா சொத்தில் வாதிக்குள்ள 1/3 பாகத்தை நாங்கள் வாதிக்கு பிரித்து தரவேண்டும் என்று சொன்னால், சரியில்லை, வாதி பிறந்தது முதல் தோட்டத்திற்கே வந்ததில்லை, 01.02.1998 ம் தேதி என் அப்பா இறப்பதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர் உடம்பு சரியில்லமல் தோட்டத்துக்கு வராத காலம் முதல் நாங்கள் தான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறோம், வாதி வந்ததே இல்லை. வாதி கேட்டுள்ளபடி வழக்கை அனுமதிக்க வேண்டும் என்று சொன்னால், இல்லை அனுமதிக்கக் கூடாது, தாவா சொத்து எங்கள் சுவாதீனத்தில் மட்டும் தான் இருந்து வருகிறது, 2003 ம் ஆண்டு வாதிக்கு கல்யாணமே நான் தான் செய்து வைத்தேன். என் எதிர்வழக்குரையிலும், என் முதல் விசாரணையிலும் 2003 ம் ஆண்டு வாதிக்கு கல்யாணமே நான் தான் செய்து வைத்தேன் என்பதை நான் சொல்லவில்லை என்று சொன்னால், என் வக்கீலிடம் அதை சொன்னேன், அவர் அதை எழுதிப் போட்டாரா இல்லையா என்பது எனக்கு தெரியாது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.